பதிவு எண் : 6311 ★ தொலைபேசி : 51331 ★ நிறுவியது : 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர் : இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர் : 15] சென்னை : ஆவணி 24உ (9—9—67) சனி ★ வெளியூர் : ஆவணி 25உ (10—9—67) ஞாயிறு [இதழ் : 73

சிந்தனையைச் சிறையிலிட்டு கொடுமை கோலோச்ச இடந்தரோம்!

அறிவுப்புனலாடி அகமகிழ்ந்த மண்ணில் பேரறிஞர் அண்ணா-- பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழாவில் செந்தமிழ் முழக்கம்!

மதுரை, செப். 7--

" 'நாட்டின் ஒற்றுமைக்காக உம் மொழி -- உம் மரபு அழிந்திடவும் ஒருப்பட வேண்டும்; பிற மொழியின் ஆதிக்கத்தை ஒப்புக்கொள்ள வேண்டும்' என்பது, அறிவுள்ள எவரும் ஏற்க முடியாதது! தன்மானமுள்ள எவரும் எதிர்த்தாக வேண்டியது! இதனை இலட்சியம் என்றோ, திட்டமென்றோ கூறுவது, இலட்சியம் என்பதற்கே களங்கம் தேடுவதாக முடியும்!

" நாட்டுப் பொதுச் செல்வம் நாளும் வளரவேண்டும் -- அதற்கான முறையில் அனைவரும் உழைத்திட வேண்டும் -- இஃது, எல்லோரும் ஒப்புக்கொள்ளத்தக்க இலட்சியம்!

" நாட்டுச் செல்வம் பெருகட்டும்; அது நாலாறு பேர்களிடம் சென்று சிக்கிக் கிடப்பினும் கவலைவேண்டாம்' என்றுரைப்பது, இலட்சியமாகாது -- அதனைக் கேலிக் கூத்தாக்குவதாகும்!

" கூடி வாழ்ந்தால் கோடி இன்பம் -- இனிய எளிய இலட்சியம்! 'கூடி வாழ்வோம்! உன்னிடம் உள்ளது எனக்கு -- என்னிடம் உள்ளதும் எனக்கு' என்று முறை வகுத்திடல் கூடி வாழ்வதாகாது!

" ஆட்டுக்குட்டியைத் தின்றுவிட்ட ஓநாய், 'என்னோடு ஆடு ஒன்றாக இணைந்துவிட்டது; நாங்கள் இணைபிரியாத சோதரர் ஆகிவிட்டோம்' என்று கூறுவது போன்ற முறையில் ஒற்றுமை வேண்டுவோர் நடந்திடக் கூடாது என்பதனை அறிவித்தல் வேண்டும்.

" பயிற்று மொழி—பாட மொழி—ஆட்சி மொழி—இணைப்பு மொழி—என்ற சொற்றொடர்கள் வேகமாக உலவிடக் காண்கின்றோம்.

" 'தாய் மொழி' என்னும் தகுதிக்கு ஈடாக, வேறு எந்தத் தகுதியையும் ஒரு மொழி பெற்றிடத் தேவையில்லை! ஆயினும், நமது தமிழ் மொழி, 'நமது தாய்மொழி' என்பதால் மட்டுமன்று—'வளமிக்கது' என்பதாலும் எவரும் வியந்து பாராட்டத்தக்கதாகிறது! அந்த வளம் கெடாமலும், மேலும் வளரவுமான செயல்களைச் செம்மையாக்கித் தருவது உமது கடமையாகும்!

" தமிழ், ஆட்சிமொழியாக எல்லாத் துறைகளிலும் திகழ்வதற்கான சூழ்நிலையை உருவாக்குவதில் வெற்றி பெற்றிட உமது நல்லார்வம் நிரம்பத் தேவை!

" உலகுடன் ஒட்டி வாழ்ந்திட—உலகின் அறிவுக் களஞ்சியத்தின் துணைபெற—ஆங்கில மொழியறிவு இன்றியமையாததாகிறது!

" 'இந்தியாவின் பல பகுதிகளுக்கு இணைப்பு மொழியாகவும், இந்தியாவுக்கும் வெளிநாடுகளுக்கும் இணைப்பு மொழியாகவும் ஆங்கிலம் இருந்திடட்டும்' என்பதனை, நாட்டுப் பற்று அற்ற தன்மை' என்றும், 'தேசியத் தன்மானம் அற்ற நிலை' என்றும் கூறுவார் உளர். 'கூறுவார்' என்று மட்டுமே குறிப்பிட்டேன்; 'கருதுவார்' என்று கூறவில்லை—காரணத்தோடு!

" 'ஆங்கிலம், முன்பு ஆதிக்கம் செலுத்தியவரின் மொழி' என்பதாலே, 'அதனை இணைப்பு மொழியாகக் கொள்வது தேசியத் தன்மானமற்றது' என்று கூறுபவர், அந்த ஆங்கில நாட்டுப் பணத்தைக் கடனாகவும் இனமாகவும் பெற்றுத் தொழில் வளர்த்திட முனைவதை, 'தேசியத் தன்மானத்தைக் கெடுப்பது' என்று கூறிடக் காணோம்! தொழில் நுட்ப அறிவுப் பெற்றிட ஆங்கிலேயரின் துணை தேடும்போது, இந்தப் பேச்சு எழக் காணோம்! மொழி பற்றி மட்டுந்தான் இப்பேச்சுப் பேசுகின்றனர்! எனவேதான், அவர்கட்கு ஆங்கிலம் கூடாது என்ற கருத்து இல்லை—கூற மட்டும் செய்கிறார்கள் என்றுரைத்தேன்.

" 'ஆங்கிலம் கூடாது' என்று கூறுவதுடன், இந்தியை 'இணைப்புக்கு ஏற்ற மொழி' என்று அவர்கள் வலியுறுத்தும்போது, கூறுபவரின் உண்மை நினைப்பும் வடிவமும் நன்றாகத் தெரிகிறது! 'இந்தப் போக்கு வெற்றிபெற விடமாட்டோம்' என மாணவர் உலகு உறுதியுடன் நிற்பதனை அறிந்திருக்கின்றேன்! மொழிப் பற்றின் எடுத்துக்காட்டாகத் திகழும் மாணவர்கட்கு என் பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

" அதேபோது, மொழிப் பிரச்சினையிலே உள்ள சிக்கல்களை—புகுத்தப்பட்டுள்ள சிக்கல்களை, நீக்குவதற்கான முயற்சிகளை மொழிப் பற்றிலே முழு நம்பிக்கை கொண்டுள்ள தமிழக அரசிடம் ஒப்படைக்கவேண்டும்—நம்பிக்கையுடன்—என்று கேட்டுக் கொள்ளுகின்றேன்.

" பல்கலைக்கழகத்தில் பயிலுங்காலை, 'வாழ்க்கையின் நீண்ட பெரும் பயணத்திலே இது, பாசறைப் பருவம்' என்ற உணர்வுடன் இருந்திடுவதே முறையாகும். பட்டம் பெற்றிடும் நண்பர்களே! உம்மிடம் நாடு நிரம்ப எதிர்பார்த்த வண்ணம் இருப்பதனை அறிந்து அதற்கேற்ப உமது செயல் முறைகளை வகுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

" இம்மாமதுரையினின்றும் புறப்பட்ட படைகள், மாநிலம் மெச்சிடும் வெற்றிகளை, முடிமன்னர் நாட்களிலே பெற்றளித்தன என்று வரலாறு கூறுகிறது!

" இன்று புறப்படும் படை அறிவுப் படை! இப்பல்கலைக்கழகத்தினின்றும் அமைந்து வெளிக் கிளம்பும் முதற்படை! இதனை வாழ்த்தி வரவேற்றுப் பாராட்டி 'சென்று வருக; வென்று வருக' என்று கூறிடும் வாய்ப்பு எனக்குக் கிடைத்ததில் நான் உள்ளபடி பெருமிதம் கொள்கிறேன்.

" தமிழ் உமது முரசு ஆகட்டும்! பண்பாடு உமது கவசமாகட்டும்! அறிவு உமது படைக்கலனாகட்டும்! அறநெறி உமது வழித்துணையாகட்டும்! உறுதியுடன் செல்வீர்! ஊக்கமுடன் பணிபுரிவீர்! ஏற்றமிகு வெற்றியினை ஈட்டிடுவீர்!"

என்று, தமிழக முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள், மதுரைப் பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழா உரையாற்றுகையில் குறிப்பிட்டார்கள். மதுரைப் பல்கலைக்கழகம் ஏற்பட்டபின் நடைபெற்ற முதல் பட்டமளிப்பு விழா இதுதான். அறிஞர் அண்ணா அவர்கள் ஒரு பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழாவில் கலந்துகொண்டு உரை நிகழ்த்தியதும் இதுதான் முதல் தடவையாகும். முதன்முதலாகப் பட்டமளிப்பு விழா உரை தமிழில் நிகழ்த்தப்பட்டதும் இதுதான்.

(தொடர்ச்சி 4-ம் பக்கம் பார்க்க)

துயர் துடைப்பு நிதி ரூ. 1,59,556

மதுரை மாவட்டக் காணிக்கை

மதுரை, செப். 8—

முதலமைச்சர் அண்ணா திரட்டி வரும் துயர் துடைப்பு நிதிக்கு மதுரை மாவட்டச் சார்பில், பொதுப் பணித் துறை அமைச்சர் திரு. மு. கருணாநிதி அவர்களிடம் 1,59,556 ரூபாயை மாவட்ட ஆட்சியாளர் திரு. நரசிம்மன் அளித்தார்.

இன்று ஒத்தக்கடையில் நடைபெற்ற கூட்டத்தில் மதுரை கிழக்கு ஊராட்சி ஒன்றிப்புச் சார்பில் ரூ. 15,000 பொதுப் பணி அமைச்சரிடம் அளிக்கப்பட்டது.

பஞ்சன் லாமாவைக் காணோமாம்!

செஞ்சீன 'திடீர்' அறிவிப்பு

திபேத்தின் மற்றொரு மதத் தலைவரான பஞ்சன் லாமா தப்பியோடி வெளிநாடு ஒன்றில் வாழ்ந்துவருகிறார் என்ற திடீர்ச் செய்தி ஒன்றை, சீன வட்டாரம் அறிவித்திருப்பதாக 'காங்டாக்' தகவல் ஒன்று தெரிவித்துள்ளது.

ஆனால் திபேத்திய மக்கள், சீனாவின் இந்தத் திடீர் அறிவிப்பை நம்பத் தயாராயில்லை என்று கூறப்படுகிறது.

'ஏதோ ஒரு சூழ்ச்சி வேலைக்காகத்தான் செஞ்சீனா, பஞ்சன் லாமாவின் பெயரோடு விளையாடுகிறது' என்றும், 'ஒருவேளை அவர், சீனாவுக்குக் கடத்திச் செல்லப்பட்டிருக்கக் கூடும்' என்றும் திபேத்திய வட்டாரங்கள் கருதுகின்றன.

பஞ்சன்லாமாவைப்பற்றி சீனா ஓராண்டுக்கு முன்னர் அறிவித்த செய்திக்குப் பின்னர், இப்போதுதான் அவர் பெயர் மீண்டும் அடிபடுகிறது!

அறிஞர் அண்ணா

சுற்றுப்பயணம்

செப். 10:

இரவு 9 மணி: வேலூர் இராசகோபால் நிலையத்தில் கல்லூரி மாணவர்கள் கருத்தரங்கில் வரவேற்பு;

செப். 11:

காலை 10 மணி: விக்கிரவாண்டி—ஊராட்சி ஒன்றிய அலுவலகம்; உயர்நிலைப் பள்ளிக் கட்டிடத் திறப்பு விழா; 10-45 மணி: சிந்தாமணி—மேல்மட்ட நீர்த் தொட்டி அடிக்கல் நாட்டுவிழா; 11-15 மணி: நகராட்சி வரவேற்பு; பேருந்து நிலையத் திறப்பு விழா;

பகல் 12 மணி: கண்டமங்கலம்—ஊராட்சி ஒன்றிய வரவேற்பு; 12-30 மணி: வளவனூர்—கால் நடை மருத்துவமனை திறப்பு விழா; கோலியனூர் ஊராட்சி ஒன்றிய வரவேற்பு;

மாலை 1-15 மணி: காணை—ஊராட்சி ஒன்றியக் கட்டிடத் திறப்பு விமா; வேளாண்மைக் கிடங்குத் திறப்பு விழா; 2 மணி: வெண்மணியாத்தூர் — பள்ளிக் கட்டிடத் திறப்பு; 4-30 மணி: பனமலை ஏரியைப் பார்வையிடல்; 5-15 மணி: ஒதியத்தூர்; 5-45 மணி: கண்டாச்சிபுரம்; 6-30 மணி: அரகண்டநல்லூர்—முகையூர் ஊராட்சி ஒன்றிய வரவேற்பு;

இரவு 7-30 மணி: மணலூர்பேட்டை; 8-30 மணி: காங்கியம் — பள்ளிக் கட்டிடத் திறப்பு விழா; திருக்கோவிலூர் ஊராட்சி ஒன்றிய வரவேற்பு; 9 மணி: அரகண்டநல்லூர்—பொதுக்கூட்டம்;

செப். 12:

தஞ்சாவூர் எல். கணேசன் எம்.எல்.ஏ. திருமணம்;

செப். 13:

வாலாபேட்டை நகராட்சி நூற்றாண்டு விழாவில் பங்கேற்பு.

‘இந்தியை தேசிய மொழியாக்குவது இந்தியாவுக்கு ஆபத்து’

‘ஆபத்துக்கு வித்திடுகிறார் இந்திரா’

இங்கிலாந்து ஏடுகள் குற்றச்சாட்டு

மொழிப் பிரச்சினையின்மீது, இந்திய வெளிவிவகாரத் துறை அமைச்சர் பதவியிலிருந்து விலகியிருக்கும் சாக்ளாவின் முடிவு, இங்கிலாந்தின் பிரபல ஏடுகளான ‘டைம்ஸ்’, ‘கார்டியன்’ ஆகிய இதழ்களை வெகுவாகக் கவர்ந்திருக்கிறது.

‘கார்டியன்’ நாளிதழ், தனது தலையங்கத்தில் எழுதியிருப்பதாவது:—

“இந்தியைத் தேசிய மொழியாக்குவது என்ற இந்திய அரசின் முடிவைப்போல் வேறு எந்த முடிவும், இந்தியாவுக்கு இதுபோன்ற ஆபத்தினை ஏற்படுத்தப் போவதில்லை.”

‘டைம்ஸ்’ ஏட்டின் தலையங்கம் குறிப்பிட்டிருப்பதாவது :—

“இந்தி மொழிப் பிரச்சினையில், இந்திரா, ஆபத்துக்குத்தான் விதை போடுகிறார் !

“இந்தியாவின் ஒற்றுமையில் நம்பிக்கை வைத்தே சாக்ளா பதவி விலகியிருக்கிறார் ; ‘ஆங்கிலத்தின் உபயோகத்தை அப்புறப்படுத்துவது நாட்டுக்கு ஆபத்தாக முடியும்’ என்று சாக்ளா கருதுகிறார்.

“விஞ்ஞானம்—தொழில் நுட்பங்களுக்காக மட்டும் ஆங்கிலம், இன்றைய இந்தியாவுக்கு தேவைப்படுவதாக இல்லை ; அதைவிட மேலாக அந்நிய உதவி இப்போது அந்த நாட்டுக்கு எவ்வளவு முக்கியமோ அந்த அளவுக்கு ஆங்கிலமும் முக்கியமாக இருக்கிறது.

“குடியரசு தினத்தன்றுதான் இந்திரா பேசினார்—‘இந்தியையோ, மற்ற மொழிகளையோ உயர் கல்விக்குப் பயிற்சி மொழியாக மாற்றுவது குழப்பத்துக்கும், ஆபத்துக்கும் வழிவகுக்கும்’ என்று !

“ஆனால் இப்போது, இந்தி மொழிக்காரர்களின் வற்புறுத்துதல்களுக்கு அவரும் பணிந்துவிட்டிருக்கிறார் என்பதனைத்தான் சாக்ளா விவகாரம் காட்டுகிறது !”

மொழிப் பிரச்சினை தீருவதற்கு வழி!

வி. வி. கிரி கருத்து

பெங்களூர், செப். 9—

“நேருவால் உருவாக்கப்பட்ட மொழிக் கொள்கையின் அடிப்படையில் மொழிப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட்டால் சச்சரவுக்கே இடமிருக்காது”

என்று, இந்தியக் குடியரசின் துணைத் தலைவர் திரு. வி. வி. கிரி கருத்தறிவித்துள்ளார்.

மைசூர் ரியஸ்த் இந்திப் பிரசார சபா பட்டமளிப்பு விழாவில் பேசுகையில் அவர் மேலும் கூறியதாவது :—

“மொழிப் பிரச்சினையில் சர்ச்சை செய்ய வேண்டிய அவசியமே இல்லை ; இருப்பினும், வீண் சர்ச்சை கிளப்பப்பட்டு வருகிறது. தாய் மொழி—ஆங்கிலம்—இந்தி—இந்த மூன்றையும் கற்றால் சர்ச்சைக்கே இடமில்லை.

“மொழிக் கொள்கையில்உள்ள உண்மையான உணர்வினை நன்கு புரிந்துகொள்ள வேண்டும். இதில் ஒருவர் மற்றொருவருடன் சண்டை போட்டுக் கொள்ளத் தேவையில்லை. உள்நாட்டின் நிலையையும் புரிந்து கொள்ளவேண்டும்.

“அனைத்துலகத் தொடர்புக்கு ஆங்கிலம் இன்றியமையாததாகும்.”

இந்தியின் பெயரால் நிகழ்ந்த பறிபாதகச் செயல்!

இந்தியாவின் ஆட்சிமொழி இந்தியாகத்தான் இருக்கும் என்று அரசியல் சட்டத்தில் ஒரு பிரிவைச் சேர்த்துவிட்டு, அதனை ‘வளப்படுத்துவதற்காக’ இந்திய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகளைப் பற்றி ‘தினமான்’ இந்தி ஏடு, தனது 20—8—67 இதழில் ஒரு கட்டுரை வெளியிட்டுள்ளது. அதன் ஒரு பகுதி பின்வருமாறு :—

“ஆங்கிலத்தை முன்மாதிரியாக வைத்துக்கொண்டு இந்திச் சொற்களைப் படைக்கும் வேலை தொடங்கியது. வாக்கியத்தையோ—வாக்கிய அமைப்பையோ கருத்தில் கொள்ளாமல் பல்வகைச் சூழ்நிலைகளைக் கணக்கில் எடுத்துக்கொள்ளாமல், மொழியின் இயல்பையும் பொருட்படுத்தாமல் ஒவ்வொரு ஆங்கிலச் சொல்லுக்கும் ஒரு இந்திச் சொல் உண்டாக்கப்பட்டது. இதற்காக இலட்சக்கணக்கான ரூபாய்கள் செலவழிக்கப்பட்டன. இந்திக்கு எதிராகப் பல வகைப்பட்டவர்களின் ஆத்திரத்தை இது வளர்த்துக் கொண்டிருந்தது. வேலை வாய்ப்புக்கருதி இந்தி கற்கின்றவர்களுக்கும், மதத்தின் பெயரால் சதி வேலைகள் நடத்துபவர்களுக்கும் இது நல்ல வாய்ப்பை ஏற்படுத்தித் தந்தது !”

சின்ன விஷயம்

இருந்து குழப்புகிறது இந்தி!

‘சிட்டுக் குருவிக்குப் பட்டம் கட்டினால், அது சட்டி பானையெல்லாம் ‘லொட லொட’வென்று தத்தும்’ என்பார்கள் !

இந்த இந்திக்கு ஆட்சிமொழித் தகுதி தரும் முயற்சியில் இந்திக்கார வெறியர்கள் செய்யும் சின்னத்தனங்களைப் பார்த்தால், ஊரை உலைக் களமாக்கி விடுவார்கள்போல் இருக்கிறது !

அதிலும் இந்த சோஷலிஸ்டுக்கார மது லிமாயி இருக்கிறாரே—அவர் ஆமதாபாத்தில் பேசிய பேச்சைப் பார்த்தால், அவர்மீது ஆத்திரத்துக்குப் பதில் அனுதாபந்தான் தோன்றுகிறது !

‘ஒரு குடைக்கீழ் உலகாண்ட தமிழ்’ என்று ஒருமுகமாய் நூல்கள் புகழும் திறல்மிக்க தமிழ், இன்று, பல மொழிகளுள் ஒன்றாய்க் கிடக்கிறது ! தமிழர் நாமும் அடக்கத்தோடு அமைதியாய் இருக்கிறோம் !

அதுமட்டுமல்ல ; உரிய சிறப்பைத் தமிழுக்குத் தருவதைக்கூடக் கேலி பேசும் தரகர்கள் இங்கே இருக்கிறார்கள் !

ஆனால் வடக்கேயோ, இந்தி மொழிப் பிரச்சினையில், காங்கிரசு அரசாங்கத்தின் கொள்கையை எழுத்துக்கு எழுத்து முன்னின்று முனைந்து செயல்படுத்துவதில் எல்லாக் கட்சிகளும் கூட்டாக இருக்கின்றன !

இல்லாவிட்டால், சோஷலிஸ்டுக்கார மது லிமாயி, ‘ஆங்கிலத்தைப்போல மும்மடங்குச் சொல்வளமுடைய மொழி’ என்று இந்தியைச் சொல்லுவாரா ?

தாம் ஓர் இந்திக்காரர் என்ற ஓர் ஆணவத்தைத் தவிர, வேறு எந்தத் தைரியத்தில் அவர் அப்படிப் பேசுகிறார் ?

இல்லாமல் குழப்பம் செய்கிறது உணவுப் பொருள் என்றால், இருந்து குழப்பம் செய்கிறது இந்தி !

முன்னாலெல்லாம்—அதாவது, பண்டித ஜவகர்லால் நேரு இருந்த காலத்தில்—இந்திக்கு ஆதரவாக இருந்த வாதம் ஒன்றே ஒன்றுதான். சரியோ தவறோ—‘பெருவாரியான மக்கள் பேசுகிறார்கள் ; எனவே சனநாயகத்தில், சிறுபான்மைக்காரர்கள் அதை ஏற்றுக்கொள்ள வேண்டியதுதான்’ என்று சொல்லிவந்தார்கள்—அஞ்சனக்காரன் முதுகில் வஞ்சனைக்காரன் ஏறிய கதையாக !

அந்த வாதத்தையேகூட அறிவாளர்கள் தவிடு பொடி ஆக்கிவிட்டார்கள் !

ஆனால் இப்போது, மது லிமாயி போன்ற இந்தி வெறியர்கள், இன்னம் ஒரு புதுப் பொய்யைப் பிரசாரமாக்குவதில் ஈடுபட்டிருக்கிறார்கள் !

உலகப் பொதுமொழியாய்—நித்தநித்தம் தோன்றிக் கிளை விடும் விஞ்ஞானப் புதுமைகளையெல்லாம் வகைப்படுத்தி விளக்கிட வல்லதாய் உள்ள ஆங்கிலத்தைப்போல் மும்மடங்கு சொற்கள் உள்ளனவாம் இந்தியில் !

ஆங்கிலத்தின் இடத்தை நிரப்பக்கூடிய ஆற்றலும் வளமும்உள்ள மொழி இந்தி என்று சொல்கிறார்களே என்ற ஆதங்கத்தில்—பாவம், ‘ஒன்பது இலட்சம் சொற்கள் உள்ளன இந்தியில்’ என்கிறார் !

‘அதுவும் இந்திச் சொற்கள் இல்லை’ என்பதை அவரே ஒப்புக்கொள்கிறார் ! உருது—சமஸ்கிருதம்—இன்னும் பல இந்திய மொழிகளின் சொற்கள் இந்தியில் உள்ளனவாம் ! அவற்றைச் சேர்த்து ஒன்பது இலட்சம் சொற்கள்—என்கிறார் லிமாயி ! வெட்கம் ! வெட்கம் !

‘இளைத்துக் களைத்து ஒடிந்துபோகிற மாதிரி இருக்கிறாயே’ என்பதற்காக, மறுநாள் பஞ்சு வைத்துக் கட்டிக்கொண்டு—மேலே சட்டையைப் போட்டுக்கொண்டு வந்து காட்டினானாம்—‘இப்போது பார் பருத்திருக்கிறேன்’ என்று ! அந்த மாதிரி இருக்கிறது இவர் பேச்சு !

மொழியின் வளம் என்பது அதன் வேர்ச் சொற்களில்தான் இருக்கிறது ! வேர்ச் சொற்கள் மிகுதியும் உள்ள மொழிதான் உயிர் உள்ள மொழி ! அதுவே தனித்து வாழத்தக்க—வளரத்தக்க மொழி ! உயர் தனிச் செம்மொழி !

இந்தியில் உள்ள வேர்ச் சொற்கள் எத்தனை ? வேர்ச் சொற்கள் இல்லாமல் வெறுஞ் சொற்களை வைத்துக்கொண்டு வீம்பு பேசுகிறவர்கள், ஆழ உழாமல் அகல உழும் அறிவு கெட்டவர்கள் ! புலி என்று நினைத்துச் சூடு போட்டுக் கொண்ட பூனைகள் !

ஆனால் ஒன்று ; இந்த இந்திவாலாக்கள், தங்கள் மொழிக்காகக் கெஞ்சிக் கூத்தாடிய காலம் போய்—கொஞ்சிக் குலவிய காலம் போய்—இப்போது, ‘கொடிறு உடைப்பேன்’ என்று கொடுங்கையைக் காட்டிக்கொண்டிருக்கிறார்கள் !

‘கொஞ்நஞ்சம் இருந்தது குருக்களை அடைந்தது ; கோவிலிலோ வௌவால் அடைந்தது’ என்கிற நிலை ஆனதும் காங்கிரசு—மற்றவர்கள் துணை வேண்டும் என்பதாலே—இதை வைத்துக் கொண்டு வடநாட்டில் வெறியாட்டம் போடுகிறது !

இந்த அழகில், ‘இந்தி எப்படி வரும் ? அதெல்லாம் நாங்கள் பார்த்துக்கொள்ளுகிறோம்’ என்று பக்தவத்சலம், கடலூர் மண்ணில் நின்றுகொண்டு கதைத்திருக்கிறார் !

தூற்றித் தொல்லை தருகிறவர்களைவிட, இப்படித் தேற்றிக் கழுத்தறுக்கும் பாவிகளை என்ன என்பது ?

—பூரணன்

இந்தி வெறியர்கள் இனியேனும் நிலைமை உணருவரா?

பதவி துறப்பு கற்பிக்கும் பாடம்—இந்தித் திணிப்பு அபாயம் குறித்து அறிஞர் அண்ணா எச்சரிக்கை

சென்னை, செப். 8—

“உலக அறிவை எல்லாம் நமது மக்கள் பெற ஆங்கிலத்தை ஒரு பலகணியாக வைத்துக்கொள்ள வேண்டியது அவசியம்” என்று, திரு. சாக்ளா தெரிவித்திருக்கும் கருத்தை தாம் மனதார ஆதரிப்பதாக முதலமைச்சர் அண்ணா அவர்கள் கூறினார்கள்.

இந்திய அமைச்சரவையிலிருந்து வெளிநாட்டுத் துறை அமைச்சர் திரு. சாக்ளா விலகியது பற்றிக் கருத்துத் தெரிவிக்கையில் மேலும் அவர் கூறியதாவது :—

“இந்தி வெறியர்களின் கடுமை காரணமாக அனுபவித்த துன்பத்தின் கடுமையைத்தான் சாக்ளாவின் பதவி விலகல் கடிதம் புலப்படுத்துகிறது ; இனி நிலைமையைக் கவனித்துப் பார்க்க வேண்டியதற்கான காலம் வந்துவிட்டது என்பதை இந்தி ஆதரவாளர்கள் உணர வேண்டும்.

“இணைப்பு மொழி விவகாரம் குறித்து சாக்ளா தெரிவித்திருக்கும் கருத்து, ஏற்கனவேயே இந்த நாட்டில் பலர் தெரிவித்ததற்கு ஏற்பவே உள்ளது ; ‘இந்தித் திணிப்பு, அபாயம் மிக்கதாக இருக்கிறது’ என்று இந்நாட்டிலுள்ள பலர் கருதுவது போலவே அவரும் கருதி அஞ்சுகிறார் !

“தமிழ்நாட்டில் பல்கலைக் கழகங்களில் தமிழைப் பாட மொழியாக்க வேண்டும் என்று நாங்கள் கூறுகிற அதே நேரத்தில், தொழில் நுட்பம் மற்றும் விஞ்ஞானப் பாடங்கள் குறித்து மிகவும் கவனமாகவும், சாவதானமாகவும் இருக்க வேண்டியதன் அவசியத்தையும் உணர்ந்திருக்கிறோம்.

“விஞ்ஞானப் பாடங்கள் அல்லாத மற்றப் பாடங்களைப் பொறுத்த வரையில், தமிழைப் பாட மொழியாக்கத் தக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுவிட்டன.”

பதவிச் சபலத்துக்கு ஆட்பட்டு ‘ஆமாம்’ போடாதவர்!

தம் கருத்தைப் பிறர்மீது திணிக்க விரும்பாதவர் !

“இந்தியாவின் குடியரசுத் தலைவராக இருந்த டாக்டர் இராதாகிருஷ்ணன் பதவிக்கு ஆசைப்பட்டு, நாட்டில் நடப்பவற்றிற்கெல்லாம் ‘ஆமாம்’ போட்டவரல்லர்; அத்தகைய சபலங்களுக்கு இடந்தராதவர் அவர்.

“அநீதி எங்கு—எந்த உருவத்தில் எழுந்தாலும், அதைக் கண்டிக்க அவர் தவறியதில்லை ! சனநாயகத்தில் அசைக்க முடியாத நம்பிக்கையுடையவர் அவர் !

“அவரிடம் உள்ள மற்றொரு சிறந்த பண்பு என்னவென்றால், எதைப் பற்றிப் பேசினாலும், எந்த ஒரு குறிப்பிட்ட கருத்தை மட்டும் தெரிவிப்பதில்லை ; அது, ஒரு முழுமையான கருத்துக் கோவையாக இருக்கும். அதனால், எல்லோரும் அவர் சொல்வதைத் தம் சொந்தக் கருத்தாக ஏற்க முடிந்தது.

“தமது கருத்தைப் பிறர்மீது திணிப்பது என்பதே டாக்டர் இராதாகிருஷ்ணனிடம் கிடையாது. அவரிடம் உள்ள இந்த நல்ல பண்பை மக்கள் பெற்றுவிட்டால் நாம் ஒரு முதிர்ந்த நாட்டினராக முன்னேறலாம் ; நமது பிரச்சினைகளை நாம் எளிதில் தீர்த்துக் கொள்ள முடியும் ; உலகப் பிரச்சினைகளுக்கும் உரிய பரிகாரம் காண உதவ முடியும்.

“அவருடைய நல்லெண்ணமும், அன்பும் எல்லா மொழிகளுக்கும் மேற்பட்ட ஓர் இணைப்பு மொழியாகும்.”

---அறிஞர் அண்ணா

—(டாக்டர் இராதாகிருஷ்ணன் பிறந்தநாள் விழாவில்)

இலங்கையில் ஆங்கிலம் !

இன்று இலங்கையில் மேற்படிப்பிற்கான பயிற்சி மொழிகளாக சிங்களம், தமிழ், ஆங்கிலம் மூன்றும் பயன்பட்டு வருகின்றன.

1968-ம் ஆண்டுமுதல் சிங்களம், தமிழ் இரண்டு மட்டிலும் தான் பயிற்சி மொழிகளாக இருக்கும்.

ஆங்கிலம் பயிற்சி மொழியாக இல்லாவிட்டாலும், 5-வது வகுப்புமுதல் கட்டாயப் பாடமாக இருக்கும்.

தமிழக அரசு எழுப்பிய ரூ. 17 கோடி கடன்

எதிர்பார்த்ததற்குமேல் கிடைத்தது

தமிழக அரசினர் எழுப்பிய ரூ. 17 கோடி கடன், அளவுக்கு அதிகமாக வசூலாகிவிட்டதால், செப்டம்பர் 6-ந் தேதியோடு தொகை பெறுவது நிறுத்தப்பட்டது.

காவல்துறை---கழகத் தொடர்பு பற்றி அமைச்சர் கருணாநிதி

சென்னை, செப். 9—

"புதிய அரசு சனநாயக முறையில் அமைந்த அரசு ; மக்களின் நம்பிக்கையைப் பெற்றுவந்த அரசு ; அத்தகைய அரசுக்கு நீங்கள் உறுதுணையாக இருக்கக் கடமைப்பட்டவர்கள்,

"எங்களுக்கும்—போலீசுத் துறைக்கும் நீண்டகாலத் தொடர்பு உண்டு. இப்போது இந்த விழாவிற்குக்கூடப் போலீசு வண்டியில்தான் வந்தேன்.

"அந்தப் போலீசு வண்டி எங்களை பாளையங்கோட்டைக்கும் கொண்டுபோயிருக்கிறது—செயிண்ட் ஜார்ஜ் கோட்டைக்கும் அதே போலீசு வண்டி அழைத்துச் சென்றிருக்கிறது !

"ஆகவே, போலீசாருடன் எங்களுக்குள்ள தொடர்பு—நாங்கள் ஆட்சியிலிருந்தாலும் இல்லாவிடினும்—இருக்கும் ; அதற்காக நாங்கள், விரைவில் சென்றுவிடுவோம் என்று பொருளல்ல ! ஐந்தாண்டுகளும், அதற்கு மேலும் மக்கள் ஆதரவிருந்தால் நீடித்து நிற்போம் !

"ஆகவே, ஏற்பட்டிருப்பது ஒரு கட்சியின் அரசு என்று கருதாது, 'எந்தக் கட்சி அரசாக இருந்தாலும் அந்த அரசுக்கு உறுதுணையாயிருந்து பணியாற்ற வேண்டியது நமது கடமை' என்று உணர்ந்து, போலீசுத்துறை பணியாற்ற வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.''

என்று, பொதுப் பணித்துறை அமைச்சர் திரு. மு. கருணாநிதி அவர்கள், காவல்துறையினரிடையே பேசுகையில் குறிப்பிட்டார்.

சென்னை எழும்பூரிலுள்ள இராசரத்தினம் விளையாட்டு அரங்கில் போலீசு விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றன.

நகரப் போலீசு ஆணையர் பி. குப்புசாமி வரவேற்றார்.

துணை ஆணையர் இராதாகிருஷ்ணன் நன்றி கூறினார்.

அமைச்சர் சத்தியவாணிமுத்து

செய்தித்துறை அமைச்சர் திருமதி சத்தியவாணிமுத்து பரிசுகளை வழங்கிப் பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

"நகர போலீசுப் படையினர் சோடைகள் அல்லர் ; எல்லா வகையிலும் வெற்றி பெறும் ஆற்றல் உள்ளவர்கள் என்பதை வெளிப்படுத்துவதாக இந்த விளையாட்டுப் போட்டி விளங்கிற்று.

"பொருளைத் தட்டிப் பறித்து ஓடுகின்ற திருடனை துரத்திப் பிடித்திட சில நேரத்தில் ஓடவேண்டி நேரிடும் ; அந்நேரத்தில் ஓடமுடியாது சோடையானால், களவு போன பொருளைத் திரும்பப் பெறமுடியாமற் போகும்.

"உங்களது நற்செயல்களால் ஆட்சிக்கு நற்பெயர் ஏற்படும். தெரிந்தோ தெரியாமலோ நீங்கள் செய்கிற தவறுகள் ஆட்சிக்குக் கெட்ட பெயரை உண்டாக்கும்.

"பந்தபாசத்துக்கு ஆட்படாமல் சட்டத்துக்கும் நியாயத்துக்கும் —கடமைக்கும் நீதிக்கும் உட்பட்டுத் தொடர்ந்து செயலாற்ற வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

"போலீசுப் படையினரை மிக எளிதாகக் குறைகூறும் மனோபாவம் இப்போது தலைதூக்கியுள்ளது. இத்தகைய தீயசக்திகளுக்கு இடமளிக்காமல்—அரசியல் பற்றிக் கவலைப்படாமல் —மக்களுக்கு முறையான பாதுகாப்பு அளித்து வாருங்கள் ! ஆட்சியினர் மக்கள் நலன் கருதி கொண்டு வருகிற சட்டங்களை அமுலாக்குவதிலும், கள்ள மார்க்கெட் — பதுக்கல் — கடத்தல் முதலிய குற்றங்களை ஒடுக்குவதிலும் உங்களது ஒத்துழைப்பு என்றென்றும் இருக்கும் என்ற நம்பிக்கை அரசுக்கு உண்டு.

"புதிய அரசின் சார்பில் போலீசுப் படையினருக்கு பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்."

வேலப்பாடி குறள்நெறி மன்ற அமைப்புக் கூட்டம்

வேலூர் — வேலப்பாடி குறள் நெறி மன்ற அமைப்புக் கூட்டம் 10—9—67 காலை 10-மணிக்கு பெருமாள் கோவில் தெரு 40-ம் எண்ணுள்ள கட்டிடத்தில் இரா. புகழேந்தி தலைமையில்—மா.வில்வமணி முன்னிலையில் நடைபெறும்.

ரூ. 60 இலட்சம் செலவில் ஜவ்வரிசி ஆலை

சேலத்தில் ஏற்பாடு

சேலம், செப். 9—

சேலத்தில் ரூ, 60 இலட்சம் செலவில் மத்திய கூட்டுறவு ஜவ்வரிசி ஆலையை ஏற்படுத்துவதற்கான திட்டத்தைத் தமிழக ஜவ்வரிசித் தொழில் ஆய்வுக் குழு அளித்தது. மத்திய நிலையமும் இத்திட்டத்தை ஏற்றுக் கொண்டது.

இந்த ஆலை நாள் ஒன்றுக்கு 100 டன் வீதம் ஆள்வள்ளிக் கிழங்கை அரைத்து ஜவ்வரிசியைத் தயாரிக்கும் திறன்படைத்தது.

ஏ.வி.பி. ஆசைத்தம்பி

நிகழ்ச்சிகள்

செப் 15 : பெருந்துறை ; 16 : கொல்லங்கோடு (கேரளம்); 17 : திருச்சி ; 18 : குளித்தலை ; 19 : சென்னை 91-வது வட்டம் ; 20 : சென்னை 71-வது வட்டம் ; 21 : சென்னை 27-வது வட்டம் ; 22 : பட்டீச்சுரம் (குடந்தை); 23 : தஞ்சாவூர் ; 24 : பாண்டிச்சேரி.

அண்ணா பிறந்த நாள் விழா

கல்லூரிப் பேராசிரியர்--மாணவர்கள் ஏற்பாடு

சென்னை பல்கலைக் கழக மாணவ—மாணவியர்களும், பேராசிரியர்களும், பேரறிஞர் அண்ணா பிறந்த நாளை செப்டம்பர் 15-ல் கொண்டாட சிறப்பான ஏற்பாடுகளைச் செய்துவருகின்றனர்.

சென்னை பட்டமளிப்பு விழா மண்டபத்தில், விழாவை நடத்த முடிவெடுத்துள்ளனர்.

இதற்கான திட்டங்களை வகுக்க மாணவ—மாணவிகள், பேராசிரியர்கள், கல்லூரி முதல்வர்களின் கூட்டம் சென்ற 3—9—67-ல் அரசிமேரி கல்லூரியில் நடைபெற்றது.

கூட்டத்திற்கு பேராசிரியர் ஜான்சன் தலைமைவகித்தார்.

அரசிமேரி கல்லூரி முதல்வர் ஐ. ஆர். ஐராவதி அம்மையார், அனைவரையும் வரவேற்றார் ; விழா சிறப்பாக அமைவதற்காக யோசனைகளைப் பற்றி விளக்கமாக எடுத்துரைத்தார்.

அண்ணா பிறந்த நாள் மாணவர் விழாக் குழு அமைப்பாளர் (பச்சையப்பன் கல்லூரி மாணவர் தலைவர்) இரா. சனார்த்தனம், ஏற்பாடுகள் பற்றிய விவரங்களை விளக்கினார்.

சென்னை வைணவக் கல்லூரி முதல்வர் பேராசிரியர் எஸ். ஆர். கோவிந்தராசன், தியாகராயர் கல்லூரி முதல்வர் கே. இராசகோபாலசாமி, வெலிங்டன் மகளிர் பயிற்சிக் கல்லூரி பேராசிரியர் திருமதி வத்சலா நாராயணசாமி, மாநிலக் கல்லூரி பேராசிரியர் கே. டி. திருநாவுககரசு, கிருத்துவக் கல்லூரிப் பேராசிரியர் ஜார்ஜ் அப்ரகாம், வைணவக் கல்லூரிப் பேராசிரியர் கே. என். ராவ் ஆகியோர் விழா சிறப்பாக அமைய தங்கள் கருத்துக்களைத் தெரிவித்தார்கள்.

அனைத்துக் கல்லூரியைச் சார்ந்த மாணவ—மாணவியர், தங்கள் கருத்துக்களை வழங்கினர்.

விழாவிற்கு வர இயலாதுபோன டாக்டர் இலக்குவனார், அரசினர் கலைக் கல்லூரி முதல்வர் இராசாக்கண்ணு, பச்சையப்பன் கல்லூரி முதல்வர் டாக்டர் சண்முகநாதன், மற்றும் பல கல்லூரி முதல்வர்களும், விழா சிறப்பாக நடைபெறத் தங்களது கருத்துக்களை எழுதி அனுப்பியிருந்தனர்.

விழாவில் அண்ணாவின் சிறப்பியல்புகளைப் பற்றி— 'அண்ணா ஒரு தலைவர்'—'அண்ணா ஒரு எழுத்தாளர்'—'அண்ணா ஒருவழிகாட்டி' —'அண்ணா ஒரு பேச்சாளர்'— 'அண்ணாவும் மாணவரும்'— 'அண்ணா ஒரு திறமைமிக்க நிர்வாகி'—என்பன போன்ற பல தலைப்புகளில், மாணவ—மாணவியர் சொற்பொழிவாற்றுவர்.

அண்ணாவின் சிறப்பியல் பற்றி மாணவ—மாணவியர் கவியரங்கமும் நடைபெறும்.

இவ்விழாவினையொட்டி குழு ஒன்று அமைக்கப்பட்டது.

கூடியிருந்த கல்லூரி முதல்வர் —பேராசிரியர்கள் — மாணவ, மாணவியருக்கு விழாக் குழு சார்பில் மாநிலக் கல்லூரி திரு. துரைமுருகன் நன்றி தெரிவித்தார்.

முடிவுகள்

சென்னை, செப். 8—

சென்னைப் பல்கலைக் கழக மாணவர்கள் நடத்தும் அண்ணா விழா பற்றிய அமைப்புக் குழுக் கூட்டம், இரண்டாவது முறையாக பச்சையப்பன் கல்லூரியில் நேற்று மாலை கூடியது.

பச்சையப்பன் கல்லூரி முதல்வர் டாக்டர் சண்முகநாதன் தலைமை வகித்தார்.

விழாக் குழு அமைப்பாளர் இரா. சனார்த்தனம் (பச்சையப்பன் கல்லூரி மாணவர் தலைவர்) அனைவரையும் வரவேற்று அரசி மேரிக் கல்லூரியில் 3—9—67-ல் கூடி எடுத்த முடிவுகள் பற்றியும், பிறகு செய்யப்பட்டுள்ள ஏற்பாடுகளையும் விளக்கினார்.

அதனைத் தொடர்ந்து சட்டக் கல்லூரி முதல்வர் திரு. பழனிசாமி, அரசி மேரி கல்லூரி முதல்வர் திருமதி ஐராவதி, எத்திராஜ் மகளிர் கல்லூரி முதல்வர் மேத்யூஸ், தியாகராயர் கல்லூரி முதல்வர் திரு. இராசகோபாலன், வைணவ கல்லூரி முதல்வர் திரு. கோவிந்தராசன், பச்சையப்பன் அறநிலையத்தைச் சார்ந்த சி. கந்தசாமி—கல்லூரி முதல்வர் திரு. ஜான்சன், மாநிலக் கல்லூரி தமிழ் துறைத் தலைவர் டாக்டர் இலக்குவனார் ஆகியோர், ஏற்பாட்டு முறைகளை விளக்கினர்.

மாணவர்கள் —பேராசிரியர்கள் —கல்லூரி முதல்வர்கள் பங்கேற்று நடத்தும் இவ்விழாவில், பேரறிஞர் அண்ணாவிற்கு வழங்க இருக்கும் பிறந்த நாள் வாழ்த்துச் செய்தி அடங்கிய வெள்ளிப் பேழையை திருமதி இராணி அம்மையாரிடம் அரசி மேரி கல்லூரி முதல்வர் ஐராவதி அம்மையார் வழங்குவார்கள்.

விழாவில் உணவு அமைச்சர் கே ஏ. மதியழகன், அரசு வழக்கறிஞர் கோகுலகிருஷ்ணன், முரசொலி மாறன், திருமதி சௌந்திரா கைலாசம் ஆகியோர் கலந்து கொள்ள ஒப்புதல் அளித்துள்ளனர்.

புகழ்பெற்ற கலைஞர்களின் இசை விருந்திற்கும் ஏற்பாடுகள் நடந்து வருகின்றன.

நீதிபதிகள், மற்றும் அரசியல் தலைவர்களையும் விழாவிற்கு அழைக்க ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

இதமான வார்த்தை பேசி ஏற்ற சிகிச்சை செய்திடுவீர்!

இரண்டு ஆண்டாகிலும் கிராமங்களில் தொண்டாற்ற முனைவீர் !

இளம் மருத்துவ பட்டதாரிகளிடை அறிஞர் அண்ணா அறிவுரை

"மருத்துவர்கள் தங்கள் தொழிலில் வெற்றிகளைக் காட்டுவது என்பது, நம் நாட்டைப் பொறுத்த வரையில் எளிய காரியமல்ல ; மேலை நாட்டு மருத்துவர்களோடு ஒப்பிட்டால், நம் நாட்டு மருத்துவர்களின் வாழ்க்கை—வசதி நிலை அத்தனையும், 'வசதியானவை' என்று சொல்ல இயலாது ; இதற்குக் காரணம், இந்நாட்டின் ஏழ்மை நிலையே ஆகும்''

என்று, முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள், சென்னை ஸ்டான்லி மருத்துவக் கல்லூரியில் நடைபெற்ற புதிய பட்டதாரிகளுக்கான பாராட்டு விழாவில் உரையாற்றுகையில் தெரிவித்தார்.

அண்ணா அவர்கள் மேலும் பேசுகையில் தெரிவித்தாவது :—

"தங்களிடம் வருவோரது நிலை அறிந்து—அவர்களது துன்பங்களையும் துயரங்களையும் கண்டுணர்ந்து—நோய் நீக்கி—நல்ல நம்பிக்கையும் உறுதியும் ஊட்டக்கூடிய ஆற்றல் உள்ளவர்கள் மருத்துவர்கள் ; மருத்துவத் தொழில் ஓர் உன்னதமான தொழிலாகும்.

மருத்துவர்கள் அளிக்கக்கூடிய சிகிச்சையும், மருந்தும் முக்கியம் என்றாலும், இதமளிக்கும் சில வார்த்தைகள், கொடும் புண்ணையும் ஆற்றவல்லவையாகும்.

உரிய வசதிகளும் சாதனங்களும் கிடைக்கப்பெற்றால், உலக மருத்துவர்களைப்போல் உயர் நுணுக்கமறிந்த மருத்துவ மேதைகள் இங்கும் தோன்றுவர் !

தங்களை நோயாளிகள் வந்து அணுகும்போது அவர்களது வாழ்க்கையின் பின்னணியை— வறுமையை அவர்கள் மூழ்கிக் கிடக்கிற அறியாமையை — மருத்துவர் உணர்ந்து, தக்கவாறு சிகிச்சை அளித்திட வேண்டும்.

நம்முடைய நாடு இன்னும் ஏராளமான கிராமங்களைக் கொண்டதாக உள்ளது. கிராமங்களை மறந்தால் அவற்றில் வாழுகிற நாட்டின் பெரும்பான்மை மக்களைப் புறக்கணிக்கிறோம் என்று பொருள் ; எனவே, இளம் மருத்துவர்கள், கிராமப்புறங்களில் குறைந்தது இரண்டாண்டுகளேனும் தொண்டாற்றுதல் வேண்டும்.

இந்த நாள் கிராமங்கள் பழைய காலத்தில் இருந்ததைப்போல் இல்லை ! கிராமங்களைச் சுற்றி ஓரிரு நகரங்களேனும் இருக்கின்றன. இந்நாளைய கிராமங்களில் ஐந்தாறு ஆண்டுகள் தங்குவோமேயானால், அதன் பின் அங்கிருந்து வெளியேறவே மனமிருக்காது."

காஞ்சி மணிமொழியார் ஆற்றிய பணிகளுக்குப் பாராட்டு

பொன்னாடை போர்த்திச் சிறப்பித்தார் அண்ணா

சென்னை, செப். 9—

கடந்த ஐந்தாண்டுக் காலம் தியாகராயநகர்த் தொகுதிச் சட்டமன்ற உறுப்பினராக இருந்து ஆற்றிய தொண்டினைப் பாராட்டும் வகையில், பழம்பெரும் கழகத் தோழர் காஞ்சி மணிமொழியார் அவர்களுக்கு செப். 5-ம் நாளன்று அறிஞர் அண்ணா அவர்கள், பொன்னாடை போர்த்திச் சிறப்பித்தார்கள்.

கோடம்பாக்கம் சிங்கார வேலர் திடலில் நடைபெற்ற இப்பாராட்டு விழாவுக்கு, கழக அமைப்புச் செயலாளர் திரு. என். வி. நடராசன் அவர்கள் தலைமையேற்று, காஞ்சி மணிமொழியார் அவர்கள் கழக இலட்சியத்துக்காக ஆற்றிய பணிகளையும், 1938 முதல் இந்தி எதிர்ப்பு இயக்கத்தில் ஏற்ற பங்கினையும் விளக்கிப் பாராட்டுரைத்தார்.

பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. மு. கருணாநிதி அவர்களும், உணவுத்துறையமைச்சர் திரு. கே. ஏ. மதியழகன் அவர்களும், திரு. மணிமொழியாரின் அரும்பணிகளைப் பாராட்டிப் பேசினர்.

மற்றும் தோழர்கள் எஸ். கே. சம்பந்தம் பி.ஏ., எம்.பி., காஞ்சி என். கிருஷ்ணன் எம்.எல்.ஏ., அருப்புக்கோட்டை சிவ. சண்முகசுந்தரனார், மா. செங்குட்டுவன், மாணவர் சின்னச்சாமி, வை. பாலசுந்தரம், வி. எம். தணிகாசலம், விருகம்பாக்கம் லோகநாதன் ஆகியோரும் பாராட்டுரை வழங்கினர்.

பாராட்டுக்கு நன்றி தெரிவித்து காஞ்சி மணிமொழியார் அவர்கள் பேசியபின், அண்ணா அவர்கள் மணிமொழியாரைப் பாராட்டியும் வாழ்த்தியும் உரையாற்றினார்கள்.

விழாக் குழுச் சார்பில் தோழர் மா. இராசன் பாராட்டிதழ் படித்தளித்தார்.

மற்றும் பல பாராட்டிதழ்களும் படித்தளிக்கப்பட்டன. ஏராளமான மலர் மாலைகளும் கைத்தறியாடைகளும் மணிமொழியார் அவர்கட்கும், அண்ணா அவர்கட்கும் அணிவிக்கப்பட்டன.

திரு. மணிமொழியார் அவர்கட்குப் பரிசுப் பொருட்கள் குவிந்தன.

விழாவுக்கு முன், கோடம்பாக்கம் தோழர் ஆர். சங்கர் அவர்கள், தமது இல்லத்தில் திரு. மணிமொழியார் அவர்கட்கு அமைப்புச் செயலாளர் என். வி. நடராசன் தலைமையில் தேநீர்விருந்தளித்தார்.

சேலத்து இரும்பு

ரோமானிய மன்னர்கள் விரும்பி வாங்கினர்

"சேலத்து இரும்பு, ஈராயிரம் ஆண்டுகளுக்குமுன் கிரேக்கத்துக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது. பாலக்காட்டுக் கணவாய் வழியாக சேலம் இரும்பும், கொங்கு நாட்டின் மற்ற விளை பொருள்களும் கிரேக்க —ரோமப் பேரரசுகளுக்கு ஏற்றுமதியாயின !

"ரோமானிய மன்னர்கள், சேலத்து இரும்பை விரும்பி வாங்கியிருக்கிறார்கள் !

"சேலம், கோவை, ஈரோடு ஆகிய இடங்களில் ரோமானிய மன்னர்களான கிளாடியஸ், அகஸ்டஸ் போன்றோரின் உருவம் பொறித்த தங்க நாணயங்கள் கிடைத்துள்ளன !

"ஜீலம் ஆற்றங்கரையில், அலெக்சாண்டர் சக்கரவர்த்திக்கு புருடோத்தமன் ஒரு வாள் பரிசு கொடுத்தான் ; பளபளத்த அந்த வாள், சேலத்து இரும்பால் செய்யப்பட்டது !

"இந்தச் செய்திகள் சேலம் மாவட்ட விவரச் சுவடியில் வெளியிடப்பட்டுள்ளன. விவரச் சுவடிகளை இனித் தமிழிலும் வெளியிட அரசு முடிவு செய்திருக்கிறது.''

---அமைச்சர் மதியழகன்

பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழாவில் அண்ணா முழக்கம்

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த கூடல்மாநகரில் இந்த மூன்று வகைச் சிறப்புக்களோடும் நடைபெற்றிருக்கும் இப்பட்டமளிப்பு விழா, தமிழக வரலாற்றில் தனியிடம் பெறக்கூடியதாக அமைந்து விட்டது. அண்ணா அவர்கள் ஆற்றிய உரை வருமாறு :—

"இப்பல்கலைக் கழகம் தொடங்கி ஓராண்டே ஆகிறது; இதுவே முதல் பட்டமளிப்பு விழாப் பேருரையாகும். இன்று நான் இங்கு நின்று, பட்டச் சிறப்புப் பெற்றிட வந்துள்ளோரையும், பெரும் பேராசிரியர்களையும் கண்டு களித்திடுகின்றேன்; இங்கன்றோ அந்நாளில் பாண்டியப் பேரரசர் சங்கப் புலவருடன் அளவளாவி—அறிவுப் புனலாடி—அகமகிழ்ந்திருந்தனர் என்பதை எண்ணுகின்றேன். எத்தகைய அறிவாற்றல்—என்னென்ன திறனாய்வு—இங்கிருந்தன அற்றை நாளில்!

இந்தத் திருநாட்டில் பிறந்திட்ட நாமெல்லாம், ஆன்றோர் அமைத்தளித்த அரு மரபுதனைக் காத்தல் நீங்காத நற்கடமை என்பதனை உணர்கின்றோம்.

'அந்த நாளும் வந்திடாதோ' என்ற உணர்ச்சியால், எவரும் உந்தப்படும் நிலை பெறுவர்! மாமதுரைப்பதியின் வரலாற்றுச் சிறப்பினை இந்நாளும் கண்டிடலாம்! எந்நாளும் அச்சிறப்பு இருந்திடச் செய்திடலாம்!

பட்டம் பெற்றிடுகின்றீர்! பல்கலையில் வல்லுநர் ஆகின்றீர்! 'பட்டம் எதற்கு—காட்டிக் களித்திடவா? அன்றிப் பணி செய்திடக் கிடைத்திட்ட ஆணையெனக் கொண்டிடாவா? நுமக்கா? நாட்டுக்கா? பொருள் ஈட்டிடவா? நாட்டுப் பெருமையினைக் காத்திடவா? எதற்கு இப்பட்டம் பயன்பட இருக்கிறது?'—அதுவே கேள்வி!

பட்டம் பெற்றிடும் சிறப்புடையீர்! நீவிர், நாட்டைச் செழிக்கச் செய்திடும் வல்லுநர்கள்! இசைபட மக்கள் வாழ உமதாற்றலை ஈந்திட வந்துள்ளீர்! இதற்கான அனுமதிச் சீட்டே இந்தப் பட்டங்கள்! இத்தகையோரைப் பயிற்றுவித்து அனுப்பிக் கொடுப்பதுவே பல்கலைக் கழகத்தின் தனிச் சிறப்பு!

எந்நாடாயினும், இடரிலும், இழிவிலும் படாமல்—இருளகன்று ஏற்றம் பெற்று இருந்திட வேண்டுமெனில், அந்நாட்டினில், தொடர்த் தொடராய் அறிவாளர் தோன்றியவண்ணம் இருந்திடல் வேண்டும்! ஆற்றல்மிக்க அறிவுப்படை—எழுந்தபடி இருந்திடல் வேண்டும்! அதற்கான பயிற்சிக்கூடம் வேறெஃதுவாய் இருந்திட முடியும்? இஃதே அப்பயிற்சிக்கூடம்—பல்கலைக் கழகம்—நாடு பல்வளமும் பெற்றிடும் நற்கலையைக் கற்றிட அமைந்துள்ள நக்கீரக் கோட்டம்!

1964—66-ம் ஆண்டுத் தேசிய கல்விக் குழுவினர் இதனை வலியுறுத்திக் கூறியுள்ளனர்—'**எவருக்கும் கட்டுப்படாமல்—இழுப்பார் பக்கம் சாய்ந்துவிடாமல் - சிந்தித்து உண்மை அறிந்து - அறிந்ததனை விளக்கமுடன் எடுத்துரைத்து - ஆளடிமையாகாமல் அச்சமற்று நிற்போரை அளிப்பதற்கே பல்கலைக் கழகம்**'—என்ற கருத்துப்பட அக்குழுவினர் கூறியுள்ளனர்.

"**ஆய்ந்தறிதல் வேண்டும்; அதற்கேற்ற அஞ்சாமை வேண்டும்; இன்றேல், சிந்தனையைச் சிறையிலிட்டுக் கொடுமையைக் கோலோச்சச் செய்வதற்கு உடந்தையானோர் ஆகிவிடுவோம்' என்றுரைக்கின்றார்—எச்சரித்திருக்கின்றார் பெட்ராண்டு ரசல் எனும் பெருமகனார்.**

ஈராயிரம் ஆண்டுகட்கு முன்னர் இங்கு அமர்ந்திருந்த புலவோர்கள் கூறிச்சென்றார்கள். இவை போன்ற ஏற்றமிகு நல்லுரை பலவற்றை இடையில் மறந்தோம்—அல்லலுற்றோம்! இன்று அவனியின் பிற பகுதிகளிலுள்ள ஆன்றோர் அதனை அறிவிக்கின்றார்; 'நமக்குண்டு அந்தக் கருவூலம்' நெடுங்காலமாக என்பதனை உணர்கின்றோம்! 'நாம் தமிழர்' என்பதனை அறிகின்றோம்! ஞாலம் இதனை அறியச் செய்திடும் தொண்டு புரிந்திட உறுதிகொள்கின்றோம்:

மதுரைப் பல்கலைக் கழகம் ஓராண்டுப் பருவத்திலுள்ளது!

நூற்றாண்டு விழா நடாத்தி முடித்திட்ட பல்கலைக் கழகங்கள் உள்ளன—நம் நாட்டில்! 'பத்தோடு பதினொன்று' என்ற முறையினிலே அமைந்ததன்று மதுரைப் பல்கலைக் கழகம்! தமிழரின் தனித் தேவை ஒன்றனைக் கருத்திற்கொண்டு துவக்கப்பட்டதாகும் மதுரைப் பல்கலைக் கழகம்.

நூறு ஆண்டுகளுக்கு முன்னர் பல்கலைக் கழகங்கள் துவக்கப்பட்டபோது, நாடு தன்னரசு இழந்து தலை கவிழ்ந்து இருந்தது! மக்கள் மனம் வெதும்பிக் கிடந்தனர்! பல்வேறு துறைகளிலே சீர்குலைவு! எங்கும் அறியாமை மட்டுமன்றி, 'இந்நாட்டினர் ஏதும் அறிந்திட வல்லர் அல்லர்' என்ற எண்ணம் கப்பிக்கொண்டிருந்த நிலை! இங்கு எவரும் இதற்கு முன்னம் நினைத்துப் பார்த்திருக்க முடியாத அறிவுக் கலைகளை மேனாட்டார் வகுத்தளிக்கின்றார் என்ற உணர்வு மேலோங்கிய நிலையுடன் பல்கலைக்கழகம் நுழைந்தனர்!

அற்றைய நாட்களில் பயிற்சி தந்திட முனைந்தோரும், பரிதாப உணர்வுடனேயே பாடம் கற்பிக்க முற்பட்டனர்! 'பிற நாட்டில் என்னென்ன கண்டனர்' என்ற வியப்பு உணர்ச்சிக்கே முதலிடம்! 'நம் நாடு ஏதேது அறிந்திருந்தது' என்பது பற்றிய கேள்விக்கு ஒதுக்கிடம்!

இங்கிலையில் வளர்ந்தன—பழம்பெரும் பல்கலைக் கழகங்கள்! 'ஆண்டான் அடிமைகட்கு—அன்பு காரணமாக, அறிவு வழங்கிடவும், வேலைக்கு ஏற்ற ஆட்கள் பெற்றிடவும் அமைந்திட்ட இடங்கள்' என்று அவை கருதப்பட்டன!

அவற்றினிலே பயிற்சி பெற்றுப் பட்டம் பெற்ற அறிவாளரில் மிகப் பலரும் நடையாலும், உடையாலும், நாட்டத்தாலும், பிறந்த நாட்டில் வாழ்கின்ற வேற்று நாட்டு வடிவங்களாகத் தம்மை ஆக்கிக்கொண்டனர்! அதிலே பெருமகிழ்வும் கண்டனர்! நெடுங்காலம் இங்கிலை!—இன்று அது பழங்கதை!

'எல்லாம் பிற நாடுகளிலே உள; நம் நாட்டிலே ஏதும் இல்லை' என்ற பிச்சை மனப்பான்மை செத்தொழிந்து, 'எமக்கு ஈந்திடுக' என்று எந்நாட்டவரும் கேட்டுப் பெற்றிடத்தக்க ஏற்புடைய எண்ணக் குவியல் எம்மிடம் உண்டு; அது மாசு படிந்த மணிபோல—மங்கியதோர் ஓவியம்போல உளது; மாசு துடைத்திடுவோம்; மணி ஒளியைக் காட்டிடுவோம்' என்று எழுச்சியுடன் கூறத்தக்க விழிப்புணர்ச்சி மேலோங்கி உள்ள காலம் இது! அதனைச் சேவிலித்தாயாகப் பெற்றுள்ளது இம் மதலை—மதுரைப் பல்கலைக் கழகம்!

எனவே, இதற்கென்று ஒரு தனித் தன்மை—இதற்காக ஒரு தனிப் பாதை இருத்தல் வேண்டும்! இந்தப் பல்கலைக் கழகம், தமிழகத்துக் கருத்துக் கருவூலம்! தன்னை உலகு காணுதற்கான வழி வகுக்கும் கோட்டமாகி, 'குறளளித்தார்—மேகலை ஒளி தந்தார்—அகமும் புறமும் அறிவித்தார்' என்று அவனியிலுள்ள நாடுகளின் வித்தகர் மெச்சிடத்தக்க புது வரலாறு சமைத்திடுதல் வேண்டும்! அதற்கேற்ற அணிவகுப்பைத் திரட்டிடுதல், இந்தப் பல்கலைக் கழகத்தின் தனித் திறனாய் அமைந்திடுதல் வேண்டும்! பாட முறை—பயிற்சி முறை—தேர்வு முறை எல்லாமே இந்தத் தனி நோக்கம் கொண்டுளதல் மிக நன்று! உரியவர்கள் இது பற்றி ஆய்ந்தறிதல் வேண்டும்!

அச்சம் தவிர்த்தல்—ஆய்ந்தறிதல்—நாட்டு நிலை உயர்த்தல்—'பிற நாடுகட்கு நம் தனிச் செல்வம் ஈது எனக் காட்டிடல்—அளித்திடல்—இவை எமது பணி' என்று கூறிடுவீர்! 'இந்த நிலை பெற்றோம் என்பதனை அறிவிக்கும் சான்றுகளே, யாம் பெற்று உள்ள பட்டங்கள்' என்பதனைச் சொல்லாலும் செயலாலும் காட்டிட வாரீர்!

அதற்குத் தளராத உறுதியும், மங்காத ஊக்கமும், ஓயாத உழைப்பும், சீரான நோக்கமும், தன்னல மறுப்பும் மிக மிகத் தேவை! பல்கலைக் கழகம் இந்தப் பண்பினைத் தந்திடும்—தந்துளது என்று எண்ணுகிறேன்; 'ஆம்' என்று உமது சீரிய பணியின் மூலம் மெய்ப்பிக்க வேண்டுகின்றேன்!

தேவையற்றவை—தீது தருபவை—பொருளற்றவை—பொருத்தமற்றவை—இவையெல்லாம் பழமையின் பெயர் கொண்டோ, 'நமது உடைமை' என்ற பாசம் காட்டியோ நெளிந்திடக் கண்டிடின் விட்டுவைத்திடாமல், அவற்றினை நீக்கிடும் அறப்போரினைத் தொடுத்திடுதல் வேண்டும்!

"'உண்மை' எனில், உயிர் கொடுத்தேனும் காத்திடுவோம், 'அன்று' எனில், உயிர் போவதெனினும் எதிர்த்து நீக்கிடுவோம்' என்று முழக்கமிட்டு அறிவுத் துறைப் புரட்சியிலே ஈடுபட எழுமாறு பட்டம் பெற்றுள்ள நல்லோரை அழைக்கின்றேன்!

இந்நாட்டுத் தேள் எனின், கொட்டிடின்—குளிர்ச்சியோ காண்போம்? பிற நாட்டுத் தேன் எனின்—பருகிடிற் கசப்போ இருந்திடும்?

'எங்கிருந்து கிடைத்திடினும்—ஏற்புடையதெனின்—எமதாக்கிக் கோள்வோம்' என்ற நோக்கம் தேவை! அதனைத் தந்திடவும், அதன் மூலம் பயன் கண்டிடவும் முனைந்து பணியாற்றிடல் வேண்டும்!

நாட்டு நிலை உயர்த்திட நல்லோர் மிகப் பலருக்குக் கிடைத்திடா வாய்ப்பைப் பெற்றுள்ள உம்மிடம் மக்கள், நிரம்ப எதிர்பார்க்கின்றனர்! நீவிர், இந்நாட்டைச் சூழ்ந்துள்ள இல்லாமை—போதாமை — அறியாமை—கயமை — என்னும் பகையினை வீழ்த்திடப் புறப்படும் முன்னணிப் படையினர்!

பட்டம் பெற்றிடுவோர் குறிக்கோளற்றுக் கிடந்திடின், நாடு நிலை குலையும்! எதிர்காலம் எழில் உள்ளதாக அமையாது!

குறிக்கோளற்ற நிலையே—மனக்குழப்பம், கோதிப்பு, அதிர்ச்சி ஆர்ப்பாட்டம், ஒழுங்கற்ற செயல்கள், ஊறு விளைவிக்கும் போக்கு, கலாம் விளைவித்தல், கட்டுக்கு உட்பட மறுத்தல் ஆகியவை—எழக் காரணமாகிறது என்று கருதுகிறேன்!

நம் நாட்டு இளைஞர்களிடம்-குறிப்பாக மாணவரிடம், கேடு நிறைந்த இயல்புகள் மிகுந்துவிட்டிருப்பதாகப் பலர் கவலை தெரிவித்துள்ளார்கள். நான், நம் நாட்டு இளைஞர்களிடம்—குறிப்பாக மாணவரிடம் நம்பிக்கை இழந்து விடவில்லை; மாறாக, அவர்களின் இயல்பிலே அடிப்படையான கோளாறு ஏதும் இல்லை; அவர்முன் குறிக்கோள் சீரிய முறையிலே காட்டப்படாததாலும், 'அறிவுரை வழங்கிடும் அன்பர்களில் பலரும் தன்னலப் பிடியினிற் சிக்கித் தகாதன செய்கின்றனர்' என்பதைக் காண நேரிடுவதாலும், அவர்கள் இயல்பு திரிந்துவிடுகிறது! நேர்வழி அடைபடுகிறது!

கேடு தரும் முறைகள் இனிப்பளிக்கின்றன என்று கருதுகிறேன்; எனவே, இளைஞரும் மாணவரும் நல்லியல்புடன் இருந்திட வேண்டுமெனில், மற்றையோர் தமது சொல்லும் செயலும், பொது நலனுக்கு உகந்ததாக அமைந்திடுமாறு பார்த்துக்கொள்வது இன்றைய அவசரத் தேவை என்பதனைக் கூறிட விழைகின்றேன்.

அதேபோது, மாணவர்கள், தமக்கு அளிக்கப்பட்டுள்ள வாய்ப்பு எத்தனை அருமைமிக்கது என்பதனை உணர்ந்து, அதற்கேற்பத் தமது செயலினை வகுத்துக்கொள்ள வேண்டுமெனக் கேட்டுக் கோள்கிறேன்.

குறிக்கோள் தெளிவாக அமைந்திடின், மாணவர்களிடம் மாண்பு மிகு செயலினை எதிர்பார்க்க முடியும் என்றுரைத்தேன். இந்தக் குறிக்கோளை மாணவர் பெற்றிடத்தக்க விதத்தில், பாடத் திட்டமும், பயிற்சி முறையும், பழகு முறையும், கல்விக்கூடங்களில் அமைந்திடல் வேண்டும்.

கல்விக்கூடங்களின் எண்ணிக்கை பெருகி—அரசுகளின் வருவாய்த் துறை அதற்கேற்ப அமையாதிருக்கும் நிலையில், கல்விக்கூடங்கள் எவ்விதமான சூழ்நிலையில் இயங்க வேண்டுமோ அவ்விதம் இருந்திடச் செய்வதும் இயலாததாக உள்ளது. படிப்படியாக, இந்நிலையினைச் செம்மைப்படுத்த அரசு முனைந்து பணியாற்றி வருகின்றது; ஆண்டு பல ஆகக்கூடும்—அடிப்படைத் தேவைகளையேனும் அளித்திட முடிவதற்கு!

வரியைக் கொண்டே பல்கலைக் கழகம் முதல் தொடக்கப்பள்ளி வரை கட்டப்பட்டுள்ளன. எத்தகைய தியாகக் கோட்டமாக இந்நாடு இந்நாளில் உள்ளது என்பதனை—எத்தனை ஏழ்மைக்கு இடையில் இந்நாட்டு மக்கள் தாம் பெற்றிராத வாய்ப்பினை நமக்கு அளிக்கின்றார் என்பதனை மாணவர் உணர்ந்திடின், அவர்களுடைய பொறுப்புணர்ச்சி மிகுந்திடும்! 'ஏற்புடைய செயலில் ஈடுபடுவதே, இத்தனை தந்திடும் ஏழையர்க்கு நாம் காட்டும் நன்றியறிதல்' என்று அறிவர்! அது மாணவர் உலகில் புதியதோர் திருப்பத்தைத் தந்திடும்! கனவு காண்கின்றேனா—இல்லை—மாணவர் நினைப்பு அறிந்து கூறுகின்றேன்!

கடினமாக உழைத்தால் மட்டுமே வெற்றி தரக்கூடிய இலட்சியங்கள் நம்முன் நிற்கின்றன! ஆனால் அதே வரிசையில், வசீகரப் பூச்சுகளுடன் மயக்கமூட்டத்தக்க பேச்சுக்களையும், 'குறிக்கோள்' என்ற பெயரால் நிற்க விடுகின்றனர்—தெளிந்து அறிதல் வேண்டும்!

'நாட்டிலே ஒற்றுமை வேண்டும்'—இது குறிக்கோள்; அனைவரும் ஏற்கத்தக்கது; 'இதன் வெற்றிக்காக அரும் பணியாற்றுவது மாணவர் கடன்.

தமிழக அரசு

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை

அறிவிப்பு

(சென்னை 34-ல் உள்ள இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை ஆணையாளர் முன்பாக)

மனு எண் 137/67

நிர்வாக அறங்காவலர்,
ஸ்ரீ கரிவரதராஜ பெருமாள் கோவில்,
அயனம்பாக்கம், சைதாப்பேட்டை வட்டம்,
செங்கற்பட்டு மாவட்டம்

—மனுதாரர்

செங்கற்பட்டு மாவட்டம் சைதாப்பேட்டை வட்டம் அயனம்பாக்கம் கிராமம் ஸ்ரீ கரிவரதராஜ பெருமாள் கோயில் விஷயமாக.

மேற்படி கோயிலுக்குச் சொந்தமானதும், செங்கற்பட்டு மாவட்டம் சைதாப்பேட்டை வட்டம் அயனம்பாக்கம் கிராமத்தில், அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ளதும் சர்வே எண் 142-ல் அடங்கிய ஏக்கர் 1.28 சென்ட் அயன் புஞ்சை நிலத்தை ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 6,000 ஏலத் தொடக்க விலையாகக் குறிப்பிட்டு, பொது ஏலத்தில் விற்பனை செய்ய அனுமதி வேண்டி 1959-ம் ஆண்டு இந்து சமய அறநிலையச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 22/1959) 34-வது பிரிவின்படிச் செய்துகொண்ட மனு. இந்த விற்பனை ஆணையாளரால் உறுதிப்படுத்தப்படுவதற்கு உட்பட்டது.

அட்டவணை

செங்கற்பட்டு மாவட்டம் சைதாப்பேட்டை வட்டம் நெ. 85 அயனம்பாக்கம் கிராமம் சர்வே எண் 142-ல் அடங்கிய ஏக்கர் 1.28 சென்ட் அயன் புஞ்சை நிலம்.

நான்கு எல்லைகள் :—

ஸ்ரீ ஜெயலட்சுமி செங்கல் சூளைக்கு	கிழக்கு
புறம்போக்கு நிலத்திற்கு	மேற்கு
கூவம் ஆற்றிற்கு	தெற்கு
ஆத்துக்கால் அல்லது கிராம சாலைக்கு	வடக்கு

19—8—1967-ம் தேதியுள்ள அறிக்கை மனு எண் 137/67

மேற்படி விஷயம் குறித்து ஆணையாளர் சென்னையிலுள்ள தம் அலுவலகத்தில் 24—10—1967-ந் தேதியன்று பிற்பகல் 2 மணிக்கு விசாரணை நடத்துவார்.

2. மறுப்புரைகளும், கருத்துரைகளும் இருப்பின் அவைகளை எழுத்து மூலமாக 23—10—1967 அன்று அல்லது அதற்கு முன் இவ்வலுவலகத்திற்கு வந்து சேரும்படி அனுப்பவேண்டும்.

3. முறையீடுகள் எவையேனும் இருப்பின் அவைகளை மேற்குறிப்பிட்ட இடத்திலும் நேரத்திலும் நேரில் தெரிவித்துக் கொள்ளலாம்.

என். பார்த்தசாரதி
ஆணையாளருக்காக
31—8—67

பாலர் அரங்கம்

செப்டம்பர் 10-ந்தேதி மாலை
2-00, 4-15 மணிக்கு
'நீரில் வாழும் மனிதன்'
(முழு நீள இரஷ்யக் கலர் படம்)
கட்டணம் வழக்கம்போல்

நடக்க இருப்பவை

பொதுக்கூட்டங்கள்

11--9--67

சென்னை 30-வது வட்டம்

நாவலர் மன்றத் திறப்பு விழா; இரவு 7-மணிக்கு அடையாறு இராமசாமி தோட்டத்தில்; பேசுவோர்; அமைச்சர் கே. ஏ. மதியழகன், இராம. அரங்கண்ணல் எம்.எல்.ஏ., டி. கே. கபாலி எம்.சி., டி. தம்பிதுரை எம்.சி., டி. துள்சிங்கம் எம்.சி., வி. தமிழ்மணி எம்.சி.

குழுக் கூட்டம்

"சங்கரன்கோவில் நகர தி.மு.க. உறுப்பினர் கூட்டம் 12—9—67 காலை 10-மணிக்கு அமைப்புச் செயலாளர் என். வி. நடராசன் எம்.எல்.சி. அவர்கள் தலைமையில் நடைபெறும்" என்று மாவட்டச் செயலாளர் எம். எஸ். சிவசாமி எம்.எல்.ஏ. அறிவிக்கிறார்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-1[illegible],) [illegible]